அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 34/92

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு. 07.
1992, திசெம்பர் மாதம் 14ஆந்திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
அரசாங்க அதிபர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
ஆளுநர்களின் தலைவர்கள்,
பிரதேச செயலாளர்கள்,

**தாபன விதிக்கோவையின் 11ஆம் அத்தியாயத்தின் 12:5:4ஆம் 12:6:1ஆம் உபபிரிவுகளுக்கான திருத்தம்.**

தாபன விதிக்கோவையிலுள்ள 1/11ஆம் அத்தியாயத்தின் 12:5:4ஆம் 12:6:1ஆம் உபபிரிவுகளைப் பின்வருமாறு திருத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது:-

"12:5:4 பதவியொன்றின் உத்தியோகத்தரொருவர் பதிற்கடமையாற்றும் போது அவர் நிலையான பதவியொன்றையும் வகிப்பவராகவிருக்குமிடத்து அவருக்குப் பின்வருமாறு கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும்:-

அவர் இரண்டு பதவிகளின் முழுக்கடமைகளையும் நிறைவேற்றுமாறு வேண்டப்படுமிடத்து அவருடைய நிலையான பதவியின் முழுவேதனாதிகளும் அவர் பதிற்கடமையாற்றும் பதவியின் ஆரம்பச் சம்பளத்தின் அரைவாசித்தொகையுடன் அவருக்கு வழங்கப்படல் வேண்டும். சம்பளமொன்று நிருணயிக்கப்படாத பதவியொன்று 1/2 சம்பளம் என்பது நியமிப்பு அதிகாரியிடமிருந்து விண்ணப்பமொன்று பெறப்பட்டபின் திறைசேரிச் செயலாளரின் உசாவுதலுடன் அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளரினால் நிர்ணயிக்கப்படவுள்ள அனுமானச் சம்பளத்தின் அரைச்சம்பளமாக விருக்கும்."

"12:6:1 அவருடைய விடயம் 12:5:4 உட்பிரிவிற்குட்பட்டிருக்குமிடத்து அது இந்த மேலதிக பதவியின் ஆரம்பச் சம்பளத்தின் அரைவாசித்தொகைக்கு மேற்படலாகாது."

02. இது 1992 சனவரி 01ஆந் திகதி தொடக்கம் செயல் வலுவிலிருக்கும்.

03. இதற்கமைவாகத் தாபன விதிக்கோவையின் பொருத்தமான உபபிரிவுகள் திருத்தப்படும்.

(எம். என். ஜுனைட்)
செயலாளர்.
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.